

ஈரோடு மாவட்டம், வெள்ளோடு, கள்ளுக்கடை மேடு பகுதியில் நெடுஞ்சாலை துறை சார்பில் ரூ.699.50 இலட்சம் மதிப்பீட்டில் சாலைகளை அகலப்படுத்தி ரவுண்டானா அமைக்கப்பட உள்ளதையொட்டி அப்பகுதியை பார்வையிட்டும், பெருந்துறை இரயில் நிலையம் அருகில் புதிதாக அமைக்கப்பட்ட ரவுண்டானாவையும் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை அமைச்சர் சு. முத்துசாமி நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜகோபால் சுன்கரா, ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், ஈரோடு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஜவகர், ஒன்றிய கழக செயலாளர் செங்கோட்டையன், ஒன்றிய பெருந்தலைவர் காயத்ரி இளங்கோ உள்ளிட்ட பலர் உள்ளனர்.

### சமூகத் தணிக்கையினை முறையாக நடத்துவதிலும் – குறைகள் கண்டறிவதிலும்

# தேசிய அளவில் தமிழ்நாடு முதன்மை மாநிலமாகத் திகழ்கிறது!

## ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் இ.பெரியசாமி அறிவிப்பு!

சென்னை, பிப்.26-

சமூகத் தணிக்கையினை முறையாக நடத்துவதிலும் - குறைகள் கண்டறிவதிலும் தமிழ்நாடு முதன்மை மாநிலமாகத் திகழ்கிறது என ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு:-

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் ஒன்றிய அரசின் அறிவிக்கையின் படி தமிழ்நாடு அரசு ஒரு தற்சார் பற்ற சமூக தணிக்கைச் சங்கத்தினை தோற்றுவித்து 2012-2013 ஆம் ஆண்டு முதல் சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது. இச்சங்கத்தின் கீழ் அனைத்து மாவட்டங்களிலும், பயிற்சி பெற்ற மாவட்ட / வட்டார / கிராம வள பயிற்றுநர்கள் சமூக தணிக்கை நடத்துவர். சமூக தணிக்கையினை, திட்டத்தின் பயனாளிகளே மேற்கொள்வது குறிப்பிடத்தக்கது ஆகும்.

சமூக தணிக்கையினை முறையாக நடத்துவதிலும், குறைகள் கண்டறிவதிலும், முறைகேட்டில் ஈடுபட்டவர்கள் மீதும் நடவடிக்கை எடுப்பதிலும் தமிழ்நாடு அரசு முனைப்புடன் செயல்படுவதால், தேசிய அளவில் தமிழ்நாடு முதன்மை மாநிலமாக திகழ்கிறது.

கிராம ஊராட்சிகளில் ஒவ்வொரு ஆண்டும் சமூக தணிக்கைகள் முடிந்த வுடன், தயார் செய்யப்பட்ட சமூக தணிக்கை அறிக்கைகள்



சிறப்பு கிராம சபைகளில் பொது மக்கள் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது. இவை அனைத்தும் முதற்கட்ட நடவடிக்கைகள் ஆகும். பின்னர் இப்பத்திகள் ஒவ்வொன்றின் மீதும் மாவட்ட அளவில் ஆய்வு செய்யப்படும். அனைத்து சமூக தணிக்கை பத்திகளையும் ஏற்புடைய பத்திகள் மற்றும் ஏற்க இயலாத பத்திகள் என பிரிக்கப்பட்டு, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் உயர் மட்டக் குழுவில் முடிவு செய்யப்பட்டு, வசூல் செய்யப்பட வேண்டிய தொகை இறுதி செய்யப்படும்.

பின்னர் அத்தொகை சம்மந்தப்பட்டவர்களிடமிருந்து பெறப்பட்டு உரிய அரசு தலைப்பில் செலுத்தப்படும்.

சமூக தணிக்கை ஆரம்பிக்கப்பட்ட 2012-13ம் ஆண்டு முதல் 2023-24 ஆம் ஆண்டு வரை, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டப் பணிகளின் சமூக தணிக்கை அறிக்கைகளின் படி மொத்தம் ரூ.291.46 கோடி நிதி இழப்பீடு எனத் தெரிவிக்கப்பட்டது. பின்னர் மாவட்ட அளவில் இது குறித்து ஆய்வு செய்யப்பட்டும். ஏற்புடைய பத்திகள் கண்டறியப்பட்டும். மாவட்ட ஆட்சித்தலைவர்களால் உயர்மட்டக்குழுவில் வசூல் செய்யப்பட வேண்டிய தொகை ரூ.105.35 கோடி என முடிவு செய்யப்பட்டது. பின்னர் அரசின் தீவீர முயற்சியின் மூலம் இதில் ரூ.98.26 கோடி தொகை வசூல் செய்யப்பட்டு அதாவது 93 சதவிகிதம் அரசின் தலைப்பில் செலுத்தப்பட்டுள்ளது. மேலும் முறைகேட்டில் ஈடுபட்டவர்கள் மீதும் தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2024-25ஆம் ஆண்டிலும், சமூக தணிக்கை நடைபெற்று, 79,122 குறை பத்திகள் என இது வரை அறிக்கை அளிக்கப்பட்டுள்ளது. இதில் 30.198 பத்திகள் நிதி இழப்பீடு பத்திகள் எனவும், அதற்கான தொகை ரூ.14.07 கோடி எனவும், மீதமுள்ள 48.924 பத்திகள் நிதி இழப்பீடு இல்லாத சாதாரண பத்திகள் எனவும் அறிக்கை பெறப்பட்டது.

இப்பத்திகள் மாவட்ட அளவில் ஆய்வு செய்யப்பட்டும், ஏற்புடைய பத்திகள் மற்றும் ஏற்க இயலாத பத்திகள் என பிரிக்கப்பட்டும். மாவட்ட ஆட்சித் தலைவர்களால் உயர்மட்டக் குழுவில் 6,437 பத்திகள் மற்றும் ரூ.204 கோடி நிதி இழப்பீடு என முதற்கட்டமாக முடிவு செய்யப்பட்டது. மேலும் இதில் வசூல் செய்யப்பட வேண்டிய பத்திகளாக 6215 பத்திகளும் நிதி இழப்பீடு தொகையாக இதுவரை ரூ.1.94 கோடி என இறுதி செய்யப்பட்டுள்ளது. மீதத் தொகை குறித்து உயர்மட்டக்குழுக் கூட்டம் மூலம் முடிவு செய்யப்பட சீரிய முயற்சிகள் நடைபெற்று வருகிறது. இது மாநில அளவில் கண்காணிக்கப்பட்டும் வருகிறது.

மேற்படி நிதி இழப்பீடு தொகை ரூ.194 கோடியில் சம்மந்தப்பட்டவர்களிடமிருந்து ரூ.193 கோடி வசூல் செய்யப்பட்டு அரசின் தலைப்பில் கட்டப்பட்டு உள்ளது. இதன் தொடர்ச்சியாக, மேற்படி முறைகேட்டிற்கு காரணமானவர்கள் மீதும் தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மீதமுள்ள பத்திகளின் மீதும் மாவட்ட ஆட்சித்தலைவர்களால் உயர்மட்டக்குழு கூட்டம் நடத்தப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வனைத்து பணிகளும் இந்நிதி யாண்டிற்குள் முடிக்கப்படும் எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

இவ்வாறு -அமைச்சர் இ.பெரியசாமி குறிப்பிட் டுள்ளார்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாள் விழா: பேரூர் செயலாளர் வி.டி.ஆர்.வி.எழிலரசன் தலைமை!

# அச்சிறுபாக்கம் பேரூர்க் கழகம் சார்பில் நலத்திட்ட உதவிகள்- பொதுக்கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. – கரூர் முரளி– க.செல்வம் எம்.பி. சிறப்புரை

காஞ்சிபுரம், பிப். 26,

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், அச்சிறுப்பாக்கம் பேரூர் தி.மு.க. சார்பில் திராவிட மாடல் நாயகர், மக்களின் முதல்வர், கழகத்தின் தலைவர் முதலவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72 வது பிறந்த நாவிழா மற்றும் இந்தியை திணிக்கும் ஒன்றிய அரசைக் கண்டித்தும் மாபெரும் பொதுக் கூட்டம் 28.2.2025-வெள்ளிக்கிழமை) மாலை 5 மணிக்கு பேரூராட்சி எதிரில் அச்சிறுபாக்கத்தில் நடைபெறுகின்றது.

கூட்டத்திற்கு பேரூர் கழகச் செயலாளர் வி.டி.ஆர். வி. எழிலரசன் தலைமை வகிக்கிறார். பா.சிவசங்கரன், பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர் பா.சிவசங்கரன் வரவேற்றுப் பேசுகிறார்.

ஏ.சையத் முகமது, பி. ஆனந்தகண்ணன், கே.மீராக பாலி, பி.எம்.சுப்பிரமணி, ஏ.ஆர்.ஏழுமலை, கே.சித்தாத்தர், பி.வேலாயுதம், ஆர்.சீதாலட்சுமி, கே.சாகுல் அமீது என்கிற கனி, ஏ.டி. ஆர்.ரமேஷ், வி.கண்ணன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக் கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் க. சுந்தர் எம்.எல்.ஏ. தலைமைக் கழகப் பேச்சாளர் கரூர் முரளி, சிறுவேடல் க.செல்வம் எம்.பி. ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

மேலும் கே.கண்ணன், டி.வி.கோகுலகண்ணன், எஸ்.உசேன், க.நந்தினி கரிகாலன், எஸ்.எம்.ஜியாவுதீன். து.சுரேஷ், அ.சக்கரியா, இரா.தருமன், ஏ.இ. ஆறுமுகம், க.பட்டாபி, உ.தாவூத்பீ உசேன், ப.ரவிக்குமார், ஆ.மோனிகா ஆனந்தகண்ணன், ஆ.பாஸ்கரன், வே.வெண்ணிலாவேல்முருகன், செ.அகிலா செல்வம், ம.சியாமளா மணிகண்டன், ஏ.அப்துல்மஜித், டி. கணேஷ்குமார், எஸ்.மஸ்தான், கே.அழகிரி, எம். கஜேந் திரன், ஆர்.பார்த்தசாரதி, எஸ்.அசேன், ஆர்.ரகுபதி, ஆர்.தணிகாசலம், இ. ஷாஜகான், எம்.மோகன், வி.ஏழு மலை, கே.வரதராஜன், எம்.அருண்குமார், செ. அகிலா, எஸ்.முகமது முபாரக், ஆர்.கோகுல் குமார், எஸ்.காயத்ரி, கே.ரகுராமன், பி.புஷ்பராஜ், கே. வெற்றிசெல்வன், இ.லோகு, எம்.ராமு, டி.வீரப்பன், டி. நாகராஜன், கே.ராமலிங்கம், ஆர்.ஆனந்தவேல், வி. மோகனகிருஷ்ணன், ஏ.சாகுல்அமீது, சு.கமல்குமார், தா.மணி, ஒய்.எஸ். ஆர்.அப்பாஸ், க.சுப்பிரமணி, இரா.சூரியா, வே. வெண்ணிலா, வெ.கலைவாணி, க.மலா, ர.செல்வி, பி.ஜிவிதா மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.




மும்மொழிக் கொள்கையை திணிக்கும் ஒன்றிய அரசைக் கண்டித்து பெரம்பலூர் மாவட்ட மாணவர் அணி சார்பில், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் தங்க.கமல் தலைமையில், பெரம்பலூர் தலைமை தபால் நிலையம் எதிரில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் தி.மு.க.மாவட்ட துணை செயலாளர் சன்.சம்பத், ம.தி.மு.க.மாவட்ட செயலாளர் ஜெயசீலன், திராவிடர் கழகம் மாவட்ட தலைவர் தங்கராசு, விடுதலைச் சிறுத்தைகள் கட்சி மாநில விவசாய அணி செயலாளர் வீர.செங்கோலன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி மாவட்ட செயலாளர் வழக்கறிஞர் ரத்தினவேல், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் து.ஹரிபாஸ்கர், ஆலத்தூர் மேற்கு ஒன்றிய கழக பொறுப்பாளர் டாக்டர் செ.வல்லபன், மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர்கள் பா.ரினோபாஸ்டின், ராகவி, கிருஷ்ணா, தெரணி.இளையராஜா, தமிழ்வேந்தன் ஆகியோர் உள்ளனர்.




# தி.மு.க.
# இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## ஒன்றிய-நகர-பகுதி-பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தலைமைக் கழகத்தின் ஒப்புதலுடன், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் அமைப்புகளுக்கு, இளைஞர் அணி அமைப்பாளர்–துணை அமைப்பாளர்களை மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாவட்ட வாரியாக நியமித்து வருகிறார்.

மண்டலம்–3 க்கு உட்பட்ட மாவட்டங்களில் நியமிக்கப்பட்ட இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், அந்தந்த மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற்று வருகிறது. மூன்றாம் கட்டமாக திருவண்ணாமலை தெற்கு, திருவண்ணாமலை வடக்கு & வேலூர் ஆகிய மாவட்டங்களில் நடைபெறும் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 26.02.2025 புதன்கிழமை | காலை 9.00 மணி | வேலூர் | எல்.கே.என். மஹால், காட்பாடி – குடியாத்தம் சாலை, லத்தேரி, வேலூர் |

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 21-02-2025




### அமைச்சர் கே.என்.நேரு சிறப்புரையாற்றுகிறார்!

# திருச்சி மத்திய மாவட்ட அனைத்து அணிகளின் நிர்வாகிகள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் க. வைரமணி வேண்டுகோள்!

திருச்சி, பிப்.26-

திருச்சி மத்திய மாவட்ட அனைத்து அணிகளின் நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் இன்று நடைபெறுகிறது என மாவட்டச் செயலாளர் க. வைரமணி தெரிவத்துள்ளார்.

இது குறித்து அவரது அறிவிப்பு வருமாறு:-



திருச்சி மத்திய மாவட்டம் மற்றும் திருச்சி மாநகரத்தில் உள்ள தி.மு.க அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் உள்ளிட்ட நிர்வாகிகளின் ஆலோசனைக்கூட்டம் இன்று (26.02.2025-புதன்கிழமை) காலை 10.00 மணியளவில் கலைஞர் அறிவாலயத்தில் எனது (மாவட்டச் செயலாளர் க.வைரமணி) தலைமையிலும், மாநகர செயலாளர் மு.அன்பழகன் முன்னிலையிலும் நடைபெறவிருக்கின்றது. இக்கூட்டத்தில் கழக முதன்மை செயலாளர் கே.என்.நேரு சிறப்புரையாற்றுகிறார்.

இக்கூட்டத்தில் நமது மாவட்டத்தில் உள்ள அனைத்து அணிகளின் நிர்வாகிகள் அனைவரும் தவறாது கலந்து கொண்டு இக்கூட்டத்தை சிறப்பிக்க வேண்டுகிறேன்.

பொருள்:1 தமிழக முதல்வர் கழக தலைவர் தளபதி அவர்களின் பிறந்தநாள் விழா, 2 கழக ஆக்க பணிகள்

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# தமிழ்நாடு முழுவதும் 1000 'முதல்வர் மருந்தகங்கள்!'

## மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்பு!

சென்னை, பிப். 26 -

தமிழ்நாடெங்கும் 1000 முதல்வர் மருந்தகங்கள் திறப்பதற்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்றுள்ளது.

இது தொடர்பாக அக்கட்சியின் மாநிலச் செயலாளர் பெ.சண்முகம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தமிழகத்தின் 39 மாவட்டங்களில் முதல்கட்டமாக கூட்டுறவு சங்கத்தின் மூலம் 500 மருந்தகங்களும், தொழில் முனைவோர் மூலம் 500 மருந்தகங்களும் என மொத்தம் 1000 மருந்தகங்களை தமிழ்நாடு முதலமைச்சர் இன்று திறந்து வைத்துள்ளார். பிற மருந்தகங்களை ஒப்பிடும்போது முதல்வர் மருந்தகத்தில் மருந்துகளின் விலை 75 சதவிகிதம் வரை குறைந்த விலையில் வழங்கப்பட உள்ளது. இதன் மூலம் ஏழை, எளிய மற்றும் நடுத்தர குடும்பத்தினரின் மருத்துவச் செலவிற்கான சுமை பெரிய அளவில் குறையும். அத்தோடு பி.பார்ம், டி.பார்ம் படித்துள்ள மாணவர்களும், தொழில்முனைவோர்களும் இந்த திட்டத்தில் பயனடைவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த திட்டத்தை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வரவேற்கிறது. இம்மருந்தகங்களில் உயிர் காக்கும் மருந்துகள் அனைத்தும் குறைந்த விலையில் கிடைப்பதை படிப்படியாக தமிழக அரசு உறுதி செய்திட வேண்டுமென மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்துகிறது.

மக்கள் நலனில் அக்கறை கொண்டு இந்த திட்டத்தை செயல்படுத்தியுள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு பாராட்டுதல்களை தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு அவர் அறிக்கையில் குறிப்பிட்டுளளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### குளித்தலை இளமுருகு
### பிப்ரவரி 26 (2000)



திராவிட இயக்கத்தின் வளர்ச்சியிலே அடிநாள் தொட்டு அக்கறையோடும் ஆர்வத்தோடும் ஈடுபாடு கொண்டு உழைத்தவர்.

தலைவர் கலைஞர் அவர்களின் ஆரம்பகாலத் தோழர்களில் ஒருவர்.

தலைவர் கலைஞர் அவர்கள் 1957ல் குளித்தலை சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட்டபோது வெற்றிக்கு அடித்தளமாக இருந்து உழைத்தவர்களில் இவரும் ஒருவர்.

காதல் கலப்புமணம் செய்தவர். ஆண்பெண் சம உரிமையை நிலைநாட்டிட வேண்டுமென்பதற்காகவே தன் பெயரோடு தன் மனைவியின் பெயரையும் இணைத்துக் கொண்டு "இளமுருகு பொற்செல்வி" என்றே தம்மை அழைத்துக் கொண்டவர்.

1991ஆம் ஆண்டு நடைபெற்ற முப்பெரும் விழாவில் தலைவர் கலைஞர் அவர்கள் இவருக்கு 'அண்ணா' விருது வழங்கிச் சிறப்பித்துள்ளார்.

"கழகத் தொண்டர்கள் உள்ளத்தில் வரலாற்றுச் சிறப்போடு வாழ்பவர்" என தனது இரங்கல் செய்தியில் தலைவர் கலைஞர் தெரிவித்துள்ளது சிறப்பாகும்.

தலைமைக் கழகம்
தி.மு.க.